# எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்ட அறிக்கை - 2023

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டம் 2023 |
| செயற்றிட்ட எண் | NF/PG/2019/0001 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | தை 2022 - மார்கழி 2022 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | யாழ்ப்பாண நூலகம், யாழ்ப்பல்கலைக்கழக நூலகம், நூலக நிறுவனம், பதிப்பகங்கள், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| பாதீடு (Budget) | |

அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

செயற்றிட்டச் சுருக்கம்

எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்றிட்டமானது ஆண்டு தோறும் நூலக நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டமாகும். எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள் நூலகத்துக்கு அன்பளிப்பாகவும் இரவலாகவும் வழங்கும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலக நிறுவனச் செயற்றிட்டங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் ஆவணங்களை எண்ணிமப்படுத்தல், நூலகச் சேகரிப்பில் விடுபட்ட ஆவணங்களையும் புதிதாக இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களையும் இனங்கண்டு அவற்றை எண்ணிமப்படுத்தல் போன்றவை இச் செயற்த்திட்டதின் முக்கிய செயற்பாடுகளாகும்.

இலக்குகளும் நோக்கங்களும்

நூலக நிறுவனத்தின் எண்ணிம சேகரிப்பைத் தொடர்ச்சியாக மேம்படுத்துவதும் பலப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தின் பிரதானமான நோக்கமாகும். எண்ணிமச்

சேகரிப்புக்கள் தம்மளவில் முழுமையாக இருந்தால் மட்டுமே அவற்றின் மூலம் ஈழத்துத் தமிழ் பேசும் சமூகங்கள் கல்வி, ஆராய்ச்சி, சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்குப் போதிய பயனைப் பெற முடியும். மேலும் அதிகம் பதிவு செய்யப்படாத குரல்களையும் விளிம்புநிலைச் சமூகங்களையும் குறிப்பாக அதிக கவனம் செலுத்தி ஆவணப்படுத்துவதும் இச்செயற்றிடத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது.

- எண்ணிம சேகரிப்பை தொடர்ச்சியாக மேம்படுத்தல் மற்றும் பலப்படுத்தல்
- இலங்கை சார்ந்த எழுத்தாவணங்களை முடிந்தளவில் முழுமைப்படுத்தல்.
- விளிம்பு நிலை மக்கள் மற்றும் அவர்களின் சமூகம் தொடர்பான ஆவணங்களை சேகரித்து இணையத்தில் இணைத்தல்

செயற்றிட்ட செயற்பாடுகள்

1. ஆவணங்களைச் சேகரித்தல்
2. ஆவணங்களை எண்ணிமப்படுத்தத் தயார் செய்தல்
3. எண்ணிமப்படுத்தல்
4. அணுக்கப்படுத்தல்
5. இணையத்தில் இணைத்தல்

அடைவுகள்

சேகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் ஊடாக வேறு செயற்திட்டத்தின் மின்வருடல்களும் நடைபெற்றது. அவ்வாறு மின்வருடி எண்ணிமப்படுத்தப்பட்ட ஏனைய செயற்றிட்ட ஆவணங்களின் விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

| செயற்றிட்டங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட பக்கங்கள் |
|---|---|---|
| நூலக எண்ணிம சேகரம் | 970 | 120,111 |
| கிளிநொச்சி | 209 | 14,148 |
| பெண்கள் ஆவணகம் | 13 | 2,148 |
| திருகோணமலை ஆவணகம் | 583 | 44,150 |
| மொத்த எண்ணிக்கை | 1775 | 180,557 |

எதிர்கொண்ட சவால்கள்

- எண்ணிம நூலகச் சேகர அபிவிருத்திச் செயற்த்திட்டதின் எண்ணிமப்படுத்தும் ஊழியர்கள் அத் செயற்த்திட்டத்துடன் ஏனைய செயற்த்திட்டங்களிலும் பணியாற்றி வந்தமை.

- இச் செயற்திட்டத்தில் மின்வருடலுக்கென நியமிக்கப்பட்ட பணியாளர் அவருக்கான மின்வருடல் இலக்கை நோக்கியே இச் செயற்திட்டத்தை முன்னகர்த்தியுள்ளார். அதனால் இங்கு ஆவணங்களை தேடுவதற்கான முயற்சியை எடுக்க முடியவில்லை. அத்துடன் இச் செயற்த்திட்டதிற்கு என கள ஆய்வாளர் இல்லாமையால், நூலகத்திற்கு கொண்டுவரப்படும் நூல்களை மட்டுமே எண்ணிமப்படுத்த முடிந்தது. (வளப் பற்றாக்குறை)
- மின்வருடல் உபகரணங்கள் பழுதடைந்த போது அதற்கான மாற்றீடு எதுவும் இல்லாமை மற்றும் அவற்றை புதிதாக கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதங்களும் இச்செயற்றிட்டத்தில் சவாலாக அமைந்தது.
- மட்டக்களப்பு மற்றும் மலையக அலுவலகங்களில் ஊழியர் , அலுவலகத்திற்கான இடம் போன்ற விடயங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக சீரான நிலையில் எண்ணிமப்படுத்தலை மேற்கொள்ள முடியாமல் போனமை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இச் செயற்றிட்டத்திற்கான கள ஆய்வாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் பரந்தளவிலான சேகரிப்புகளை இனங்கண்டு எண்ணிமப்படுத்த முடியும்.
- அடைவுகளை நோக்கி பயணிக்காமல் சேகரிப்புக்களை முழுமைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட இலக்க்குகளை நிர்ணயித்தல்.
- சரியான பணியாளர்களை மற்றும் பொருத்தமான இடங்களை மட்டக்களப்பு மற்றும் மலையக செயற்றிட்டத்திற்காக ஒழுங்கமைத்தல்.